# புகை அலாரங்கள்

**விக்டோரியாவிலுள்ள அனைத்து குடியிருப்புகளிலும் செயல்படக்கூடிய புகை அலாரங்கள் இருக்க வேண்டும்.**

10 ஆண்டு லித்தியம் பேட்டரியுடன் கூடிய புகை அலாரங்களை விக்டோரிய தீயணைப்புச் சேவைகள் பரிந்துரைக்கிறது. இதனால் நீங்கள் பேட்டரியை வருடந்தோறும் மாற்றவேண்டி இருக்காது.

புகை அலாரங்கள் ஒன்றுக்கொன்று இணைந்திருக்கும்படி அமைக்கப் பரிந்துரைக்கிறோம். இதனால் ஏதேனுமொரு அலாரம் செயல்படத் தொடங்கியதும் அனைத்து புகை அலாரங்களும் சப்தமிடத் தொடங்கி, உங்கள் நேசத்துக்குரியவர்கள் தப்பிப்பதற்கு முக்கிய நொடிகளை உங்களுக்கு அளிக்கும்.



### மாதம்தோறும் சோதியுங்கள்

- பொத்தானை அழுத்துங்கள்
- அலாரம் பீப் ஒலி எழுப்பும்வரை பிடித்திருங்கள்



### வருடந்தோறும் தூசுதட்டுங்கள்

- புகை அலாரத்தின் மூடியைச் சுற்றிலும் தூசு தட்டுங்கள்
- பொருந்துமெனில், வருடந்தோறும் புகை அலாரத்தின் பேட்டரியை மாற்றுங்கள்



### ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கும் மாற்றுங்கள்

- அனைத்து புகை அலாரங்கள் (திண்ணமான வயர் மற்றும் பேட்டரியால் இயங்குவது) மாற்றப்பட வேண்டும்

மே 2021

FIRE RESCUE VICTORIA

CFA

# எனது புகை அலாரங்களை எங்கு நிறுவ வேண்டும்?

- புகை அலாரங்கள் படுக்குமிடங்கள் ஒவ்வொன்றுக்கும் வெளியே வீட்டு மட்டத்தில் பொருத்தப்பட வேண்டும்.
- கூடுதல் புகை அலாரங்கள் வீட்டுக்கு உள்ளே அனைத்துப் படுக்கையறைகளிலும் புழங்குமிடங்களிலும் நிறுவப்பட வேண்டும்.
- புகை அலாரங்களை குறைந்தது சுவரிலிருந்து 30 செ.மீ. உயரத்தில் கூரை மீது நிறுவ வேண்டும். கூரையின் மத்தியில் இருப்பது நல்லது.
- புகை அலாரங்கள் ஆஸ்திரேலிய தரநிலை AS3786 கொண்டிருக்க வேண்டும்.

Certified Product™
Australian Standard

**சட்டப்படி, புகை அலாரங்களை ஒவ்வொரு படுக்குமிடங்களுக்கும் வீட்டின் பிற பகுதிகளுக்குமிடையில் நிறுவ வேண்டும்.**

**வீட்டின் அனைத்து படுக்கையறைகள் மற்றும் புழங்குமிடங்களில் கூடுதல் புகை அலாரங்களை நிறுவ விக்டோரியன் தீயணைப்புச் சேவை பரிந்துரைக்கிறது.**




FIRE RESCUE VICTORIA
CFA

கூடுதல் தீப் பாதுகாப்புத் தகவல்களுக்கு frv.vic.gov.au மற்றும் cfa.vic.gov.au தளங்களுக்கு வருகை தாருங்கள்